# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 மார்ச் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 28.03.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் : 1</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.

கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–208 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78 (3)ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்கான ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78 (3)ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படுவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.343</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினந்தோறும் அதிகமாக பொது மக்கள் வெளியூர் சென்று வருகிறர்கள் மேலும் வெளியூர் மக்களும் இந்நகருக்கு வந்து செல்கிறார்கள் இவர்கள் தினந்தோறும் பேருந்துகளுக்காக வெகுநேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நகராட்சிக்குட்பபட்ட பகுதிகளில் நிழற்குடை ஏதும் இல்லாததால் பொதுமக்கள் கோரிக்கையின்படியும், இந்நகர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பேருந்து நிற்கும் கீழ்காணும் இடங்களில் நிழற்குடை அமைக்க பொறியாளர்களால் மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது.

**(கோப்பு எண்.322/2018/இ1)**

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கீழக்கரை ஏர்வாடி இணைப்பு சாலை இருபுறமும் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் பயணிகள் நிழற்குடைகள் அமைக்கும் பணி – 2 எண்ணம். | ரூ.3,20,000/– |
| 2 | கீழக்கரை கிராம நிர்வாக அலுவலகம் (சதக்பொறியியல் கல்லூரி குடியிருப்பு அருகில்) மற்றும் வள்ளல் சீதக்காதி குத்பா பள்ளி அருகில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்கும் பணி – 2 எண்ணம். | ரூ.3,20,000/– |

மேற்காணும் மதிப்பீட்டில் கண்டுள்ள பணிகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டும், நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. பொது மக்கள் நலன் கருதி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.6,40,000–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.344** அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 3

இந்நகர் மன்ற தீர்மான எண் 328 நாள் 28.02.2018–ன் படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட (1) வார்டு எண் 16 புதுக்குடி தெரு, (2) வார்டு எண் 11 சாலைத் தெரு, (3) வார்டு எண் 1 மறவர் தெரு, (4) வார்டு எண் 20 ஹமீதியா பள்ளி அருகில் (5) வார்டு எண் 3 பெத்ரி தெரு ஆகிய 5 இடங்களில் குடிநீர் குழாய் பைப்புகள் உடைப்புகள் சரிசெய்யவும் புதிய குடிநீர் குழாய்கள் மாற்றி பழுதுநீக்கம் செய்வதற்குரிய (பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட) பணி செய்து கொடுப்பதற்கு 20.03.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 159 /2018/இ1)**

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஆர். உத்தண்டி,<br>என்ஜினியரிங காண்ட்ராக்டர்,<br>1/556-A நேரு நகர், 9வது தெரு<br>கலக்ட்ரேட்(போஸ்ட்), இராமநாதபுரம். | ரூ.29,550/– |
| 2 | திரு.எஸ்.கே.மதிவாணன்,<br>மதி பில்டர்ஸ்,<br>19/107, வி.எஸ்.சாலை, கீழக்கரை | ரூ.30,000/– |
| 3 | திரு.சி.பழனி<br>CPA என்ஜினியரிங காண்ட்ராக்டர்,<br>2/70–7 புது பஸ் ஸ்டாண்ட் அருகில்<br>கீழக்கரை. இராமநாதபுரம் மாவட்டம் | ரூ.31,250/– |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ 29,550/—க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.உத்தண்டி, என்ஜினியரிங காண்ட்ராக்டர், இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.345** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட கீழக்கரை குரூப் சர்வே எண்.249/2A1A –ல் வைரம்ஸ் கார்டன் என மனைப்பிரிவுதானாக பிரிக்கப்பட்டு உள்ளதை அரசானை எண்.78 மற்றும் 172 வீட்டு வரி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை 04.05.2017 மற்றும் 13.10.2017—ன்படி அனுமதியற்ற மனைப்பிரிவை அஙகீகாரம் பெற்ற பவர் ஏஜெண்ட் திரு. சயீது இப்ராஹூம் என்பவர் அனுமதி கோரியதின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) சிவகஙகை அவர்களின் செயல்முறை உத்திரவு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ (சி.ம) எண்.41/2018 நாள்.19.01.2018—ல் மொத்த மனைகள் எண்ணம் அஙகீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ள சாலைகள் மற்றும் பூஙகா இடஙகளை நகராட்சிக்கு தான பத்திரம் எழுதி கொடுக்கவும் மேற்படி உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிய முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொண்டு மேற்படி மனைபிரிவில் கண்டுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1389 /2017/எப்1)**
**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகாளான சாலை மற்றும் பூஙகா இடத்தினை நகராட்சியின் பாரமரிப்பில் எடுத்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.346** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட கீழக்கரை குரூப் சர்வே எண்.230/1A மற்றும் 230/1Bpt –ல் தாய் கார்டன் என மனைப்பிரிவுதானாக பிரிக்கப்பட்டு உள்ளதை அரசானை எண்.78 மற்றும் 60 வீட்டு வரி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை 04.05.2017 மற்றும் 13.10.2017—ன்படி அனுமதியற்ற மனைப்பிரிவை அஙகீகாரம் பெற்ற பவர் ஏஜெண்ட் திருமதி. எம்.எஸ்.மஜித்துன் நிஷா பீவி, மற்றும் திரு.எம்.எஸ்.அகமது பாய்ஸ், என்பவர் அனுமதி கோரியதின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) சிவகஙகை அவர்களின் செயல்முறை உத்திரவு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ (சி.ம) எண்.43/2018 மற்றும் 173/2018 நாள்.17.03.2018—ல் மொத்த மனைகள் 43 எண்ணம் அஙகீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ள சாலைகள் மற்றும் பூஙகா இடஙகளை நகராட்சிக்கு தான பத்திரம் எழுதி கொடுக்கவும் மேற்படி உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிய முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொண்டு மேற்படி மனைபிரிவில் கண்டுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1388 /2017/எப்1)**

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகாளான சாலை மற்றும் பூஙகா இடத்தினை நகராட்சியின் பாரமரிப்பில் எடுத்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.347** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சுமார் 22 MT திடக்கழிவுகள் தினசரி சேகரிக்கப்பட்டு குப்பைகளை நகராட்சி உரக்கிடஙகிற்கு கொண்டு செல்லப்பட்டும் டம்பர்பிளேசர் பின்கள் பழுதடைந்து குப்பைகள் சேகரித்து கொண்டு செல்ல முடியாத நிலையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுதடைந்த டம்பர் பிளேசர் பின்களை பழுதுநீக்கம் செய்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 325 நாள் 28.02.2018–ந் தேதி அனுமதியின் அடிப்படையில் பொறியாளரால் கீழ்கண்ட விபரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. (கோப்பு எண். 201/ 2018/இ1)

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள டம்பர்பிளேசர் வாகனத்தின் பின்கள் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் (20 எண்ணம்) | 5,00,000/– |

மேற்காணும் மதிப்பீட்டில் கண்டுள்ள பணிகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டும், நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனஙகள் ரூ.5,00,000–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.348** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 109 தெருக்களில் மொத்த வீடுகள் 11362 மற்றும் 1982 கடைகள் மற்றும் வணிகவளாகஙகள் அமைந்துள்ளது. தற்பொழுது 49 துப்புரவு பணியாளர்களை கொண்டு 15 மூன்று சக்கரவாகனஙகளில் முதல்நிலை குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு 21 MT குப்பைகள் சேகரிக்கப்பட்டு இரண்டு டம்பர்பின் வாகனஙகள் ஒரு காம்பேக்டர் வாகனம் மற்றும் 2 டிராக்டர்கள் மூலம் நகராட்சி உரக்கிடஙகிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி தற்பொழுது உள்ள 15 மூன்று சக்கரவாகனஙகளை கொண்டு அனைத்துப் பகுதிகளிலும் Door to Door Collection செய்ய முடியாத நிலையில் உள்ளதால் இந்நகர் மன்ற தீர்மான எண் 330 நாள் 16.03.2018–ந் தேதிய அனுமதியின் படி பொறியாளரால் கீழ்கண்ட விபரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது

**(கோப்பு எண். 290/ 2018/இ1)**

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் மூன்று சக்கர வண்டி (Try Cycle) வாங்குதல் (15 எண்ணம்) | 4,85,000/– |
| 2 | கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் தள்ளு வண்டிகள் (Push and Pull Carts) வாங்குதல் (25 எண்ணம்) | 5,80,000/– |

மேற்காணும் மதிப்பீட்டில் கண்டுள்ள பணிகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டும், நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட இரண்டு எண்ணம் மதிப்பீடுகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.10,65,000–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.349</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

கீழக்கரை நகராட்சி பயன்பாட்டில் உள்ள கணினிகளை இயக்கும் பணி செய்வதற்கு கணினிகளை பாரமரிப்பு செய்வதற்கும் கணினி தட்டச்சு செய்வதற்கும் ஒரு கணினி இயக்குபவர் (Typist/Computer Operator/Data Operator) தேவையாக உள்ளது. இந்நகராட்சி அலுவலக பணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டும் நிர்வாக நலனை கருத்தில் கொண்டும் ஒரு கணினி இயக்குபவர் (Computer Operator) 2017–18 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம், அவர்களின் செயல்முறை K.Dis/A3/619/2017 நாள்.12.06.2017–ன்படி அனுமதிக்கப்பட்ட தினகூலி விலை விகித அடிப்படையில் (Out Sourcing) முறையில் பணி செய்வதற்கு தினக்கூலி விலைவிகித அட்டவனை லேபர் சார்ஜ் வரிசை எண்.86–ல் கண்டுள்ளபடி (Typist/Computer Operator/Data Operator) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.389/– வீதம் ஒரு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) முறையில் பணி அமர்த்திக்கொள்ள 12 மாதஙளுக்கான உத்தேச செலவீனம் ரூ.1,90,000/– ஐ இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.1065/இ1/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு கணினி இயக்குபவர் (Computer Operator) ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வழுஙகலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவீனம் ரூ.1,90,000/–ஐ மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.350</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

கீழக்கரை நகரில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு கேற்பவும், நகரின் விரிவாக்கத்திற்கு கேற்பவும், இந்நகராட்சியில் தூய்மை இந்தியா பணியினை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசாணை(நிலை) எண்.101 நாள். 30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி 156 துப்புரவுப் பணியாளர்கள் தேவையாக உள்ளது. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 32–ல் தற்போது பணியில் 24 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.இந்த காலிப்பணியிடத்தின் எண்ணிக்கையை ஈடுகட்டும் வகையிலும் அரசாணை அளவு கோலின்படி தேவையான 132 துப்புரவுப் பணியாளர் பணியிடத்திற்கு இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 32 துப்புரவுப் பணியாளர்கள் போக, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.1528/2012/எச்1 நாள்.14.03.2017–ன்படி தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவுப் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நகராட்சிக்கு அரசாணை(நிலை) எண்.101 நாள்.30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி அனுமதிக்க வேண்டிய 156 துப்புரவுப் பணியிடங்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியிடங்கள் போக கூடுதலாக 107 துப்புரவு பணியாளர் தனியார் மூலம் மீதமுள்ள வார்டுகள் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்து தனியார் மயமாக்கி (Out Sourcing) துப்புரவு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி நிதிநிலைமைக்கு ஏற்றவாறு நகர் மன்ற தீர்மானம் எண்:312–ல் நாள்: 09.02.2018–ன்படி தீர்மானிக்கப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:1528/2012/எச்1 நாள்.25.10.2017 மற்றும் 22.02.2018–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு உரிய வழிமுறையாக பிரேரணை அனுப்பப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.6819/2017/பி3 நாள்.14.03.2018–ன்படி தனியார் மூலம் 99 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவுப் பணிமேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு இந்நகராட்சி நிதிநிலைமை கருத்தில் கொண்டு தற்போது தனியார் மூலம் 55 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவுப் பணிமேற்கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ,92,75,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ள மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**( ந.க.எண்:1528/2012/எச்1)**

**நிபந்தனைகள்:**

1. பணியாளர் வழஙகும் நிறுவனம் / ஒப்பந்தாரரை தேர்வு செய்ய Tendar Trans paranay ACT & Rules-ல் கூறப்பட்ட வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. தேவையான பணியாளர்களை வழஙகுவது பணியாளர் வழஙகும் நிறுவனம் / ஒப்பந்ததாரரே பொறுப்பாகும்.
3. பணியாளர்களுக்கான ESI,EPF, ஆயுள் காப்பீடு சீருடை மற்றும் பாதுகாப்பு கவசஙகள் செலவினஙகள் மற்றும் நிர்வாக கட்டணம் ஆகியவற்றை பணியாளர் வழஙகும் நிறுவனம் / ஒப்பந்ததாரருக்கு நகராட்சியால் வழஙகப்பட வேண்டும்.
4. மதிப்பீட்டு தொகையில் 10% சதவிகிதம் குறைவாக கொடுக்கப்படும் ஒப்பந்த புள்ளியை பரீசினையில் எடுத்துக் கொள்ள கூடாது.

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சியில் 55 பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் செய்ய ரூ-92,75,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதீப்பீட்டுற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.

3. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதத்தின்படி தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) முறையில் துப்புரவு பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளி பெறத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.351** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிகளால் பழுதான சேதமடைந்த இந்நகரின் முக்கிய சாலைகளை சீரமைப்பு செய்யும் பொருட்டு சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.300.00 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **சிப்பம்–1 (Package-I)**<br>வார்டு எண்.2 அன்னா நகர் முன்று குறுக்கு தெருக்கள்,முத்துசாமிபுரம் இரண்டு குறுக்கு தெருகள், வார்டு எண்.3 பெத்திரி தெரு பகுதிகள், பட்டானிஅப்பா முன்று குறுக்கு தெருக்கள், வார்டு எண்.6 வள்ளல் சீதக்காதி சாலை(ஹீசைனியா மஹால்) முதல் இந்து பஜார், வார்டு எண்.5 நான்கு பஙகளா முதல் வார்டு எண்.1 கிழக்கு நாடார் தெரு வரை பேவர்கல் சாலை பதிக்கும் பணி. | 1.550 | 100.00 |
| 2 | **சிப்பம்–2 (Package-II)**<br>வார்டு எண்.11 பழைய பேருந்து நிலையம் முதல் வார்டு எண்.13 சஙகுவெட்டி தெரு வரை, வார்டு எண்.12 நடுத் தெரு முதல் வார்டு எண்.11 ஜின்னா தெரு வரை, வார்டு எண்.12 கருப்பட்டிக்காரத் தெரு மற்றும் ஒடக்கரைப்பள்ளி முன்புறம் ,வார்டு எண்.19 மற்றும் 20 வடக்கு பகுதிகள், வார்டு எண்.20 காலவாசல் சந்து மற்றும் சி.ஐ.எஸ் சர்ச் பின்புறம், வார்டு எண்.15 பன்னாட்டர் தெரு, மேலத்தெரு பள்ளிவாசல் முதல் கோல்டன் பீச் சாலை வரை, மற்றும் கடற்கரை சர்ச் முதல் மேலத் தெரு வரை. வார்டு எண்.2 அன்புநகர் இரண்டு குறுக்கு தெரு, இந்துக்கள் மயான கிழக்கு பகுதியிலிருந்து மேற்கு பக்கம் வரை. வார்டு எண்.4 பாத்திமாக்காலனி தெருக்களில் பேவர்கல் சாலை பதிக்கும் பணி. | 3.550 | 200.00 |
| | **மொத்தம்** | **5.100** | **300.00** |

**(கோப்பு எண்.இ1 /326 / 2018)**

**அலுவலக குறிப்பு**

1. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்
2. மதிப்பீடு ரூ. 300.00 இலட்சத்தினை அரசு முழுமானியத்துடன் அனுமதிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.352** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
கீழக்கரை நகராட்சி